## ஜனவரி – 28 – பொதுக்கால 04ம் ஞாயிறு

"அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்து வந்தார்."(மாற்கு 1:12)

---

### முதல் வாசகம் : இணைச்சட்டம் 18 : 15 - 20

அந்நாட்களில் மோசே மக்களிடம் கூறியதாவது: கடவுளாகிய ஆண்டவர் உன் சகோதரர் நடுவினின்று என்னைப்போல் ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவிகொடு. ஓரேபில் திருப்பேரவை கூடிய நாளில், நீ உன் கடவுளாகிய ஆண்டவரிடம் மன்றாடி, "நான் இறந்து போகாதபடி, என் கடவுளாகிய ஆண்டவரின் குரலொலியை இனி நான் கேட்காமலும் இப்பெரும் நெருப்பை இனி நான் காணாமலும் இருப்பேனாக" என்று விண்ணப்பித்தபோது, ஆண்டவர் என்னைநோக்கி, "அவர்கள் சொன்னதெல்லாம் சரி" என்றார். உன்னைப்போல் ஓர் இறைவாக்கி னனை அவர்களுடைய சகோதரர்களினின்று நான் அவர்களுக்காக ஏற்படுத்துவேன். என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன். நான் கட்டளையிடுவது அனைத்தையும் அவன் அவர்களுக்குச் சொல்வான். என்பெயரால் அவன் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் வேரறுப்பான். ஆனால், ஓர் இறைவாக்கினன் எனது பெயரால் பேசுவதாக எண்ணிக்கொண்டு, நான் அவனுக்குக் கட்டளையிடாதவற்றைப் பேசினால், அல்லது வேற்றுத் தெய்வங்களின் பெயரால் பேசினால், அந்த இறைவாக்கினன் சாவான்.

**பதில்பாடல் :** உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர் ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர்

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 7 : 32 – 35

சகோதர சகோதரிகளே! நீங்கள் கவலையற்றவர்களாய் இருக்கவேண்டுமென்றே நான் விரும்புகிறேன், மணமாகாதவர் ஆண்டவருக்குரியவற்றில் அக்கறை கொள்கிறார் எப்படி அவருக்கு உகந்தவற்றைச் செய்யலாம் என எண்ணிக்கொண்டிருக்கிறார். ஆனால் மணமானவர் உலகுக்குரியவற்றில் அக்கறைகொள்கிறார் எப்படித் தம் மனைவிக்கு உகந்தவற்றைச் செய்யலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் மனம் பிளவு பட்டுள்ளது. மணமாகாத பெண்ணும் கன்னிப்பெண்ணும் ஆண்டவருக்குரியவற்றில் அக்கறை கொள்வதால் அவர்கள் உடலிலும் உள்ளத்திலும் தூயோராகின்றனர். ஆனால் மணமான பெண், உலகுக்குரியவற்றில் அக்கறை கொள்வதால் எப்படித் தம் கணவருக்கு உகந்தவற்றைச் செய்யலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறார். உங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல, உங்கள் நலனுக்காகவே இதை நான் சொல்கிறேன். எல்லாம் ஒழுங்காய் இருக்கவும் நீங்கள் முழுமனத்தோடு ஆண்டவரிடம் பற்றுக் கொண்டிருக்கவுமே இவ்வாறு சொல்கிறேன்.

### நற்செய்தி : மாற்கு 1 : 21 - 28

அக்காலத்தில் இயேசுவும் அவரது சீடர்களும் ஒருமுறை கப்பர்நாகும் ஊரில் நுழைந்தார்கள். ஓய்வு நாட்களில் இயேசு தொழுகைக்கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத் தோடு அவர்களுக்குக் கற்பித்து வந்தார். அப்போது அவர்க ளுடைய தொழுகைக்கூடத்தில் தீய ஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த ஆவி, "நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று கத்தியது. "வாயை மூடு இவரை விட்டு வெளியோ போ" என்று இயேசு அதனை அதட்டினார். அப்பொழுது அத்தீய ஆவி அம்மனிதருக்கு வலிப்பு உண்டாக்கிப் பெருங்கூச்சலிட்டு அவரை விட்டு வெளியேறிற்று. அவர்கள் அனைவரும் திகைப்புற்று, "இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே! இவர் தீய ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார் அவையும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே!" என்று தங்களிடையே பேசிக் கொண்டனர். அவரைப் பற்றிய செய்தி உடனே கலிலேயாவின் சுற்றுப்புறமெங்கும் பரவியது.

**தியானம் :** இறைமகன் இயேசுவின் போதனையையும், அவர் செய்த அருஞ்செயல் சாதனையையும்,கண்டு மக்கள் வியந்துபோகின்றனர். அவ்வதிகாரம் ஆட்சியாளர்களின் அதிகாரம் போன்றதல்ல, அதிலும் குறிப்பாக மறைநூல் அறிஞரின் அதிகாரத்தைவிட வேறுபட்டிருந்தது. ஆழமான இறை நம்பிக்கையில் உருவான அதிகாரமாக அது இருந்தது. மறைநூல் அறிஞர்களிடம் இவ்வாறான அதிகாரம் இருக்கவில்லை. அவர்களிடம் அங்காரம் மட்டுமே இருந்தது. மறைநூலைக்கூட மக்களிடமிருந்து மறைத்தே வைத்திருந்தனர். இயேசு மறைநூலின் உண்மையை உள்ளூர வாழ்ந்தவர். அதன் உண்மையாய் உலகில் தோன்றினார். இதனால்தான் தீய ஆவிகூட "நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று சான்று பகிர்கின்றது. அவர் எப்போதும் கடவுளுக்கு சொந்தமானவர். என்பது இதன் பொருள். இந்த பந்தத்தில் பிறந்ததுதான் உண்மையான அதிகாரம். இந்த அதிகாரத்தில் பங்கு பெறவே நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். "என் நாமத்தில் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் கொடுப்பேன்" என்று அந்த அதிகாரத்தைபெற்றுக் கொள்ளும் உரிமையையும் யேசு எமக்கு விட்டுச் சென்றிருக்கின்றார். நாம் அவைகளைப் பெற்று பயன்படுத்துகின்றோமா? விவிலியத்தை நாம் வாசிக்கும் போதெல்லாம் ஆண்டவரே அதிகாரத்தோடு பேசுகிறார் என்பதை நாம் உணர்கின்றோமா,?